76—

ஆரம்ப சுகாதார நிலையம்

***37679—திரு. சி.வி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதி, சின்னமட்டாரப்பள்ளி ஊராட்சி, சிந்தகம்பள்ளி கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பர்கூர், தொகுதி, சின்னமட்டாரப்பள்ளி ஊராட்சி, சிந்தகம்பள்ளி கிராமத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கக்கூடிய பர்கூர் ஒன்றியத்தில், ஜெகதேவி பிரதான அரசு ஆரம்ப சுகாதார நிலையம், 30 படுக்கைகள் கொண்டதாக ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டிருக்கின்ற காரணத்தால், இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. சி.வி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்கள் நலனே தன் நலம்' என்று வாழ்ந்து, மண்ணைவிட்டு மறைந்தாலும் மக்கள் மனதில் நிலைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை, திறம்பட நடத்திவரும், மக்களின் அன்பைப் பெற்ற விவசாயிகளின்*

2019 ஜூலை 10]

உற்ற தோழன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உற்ற துணையாக அரசை வழிநடத்தும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். மேலும், மக்கள் நல்வாழ்வுத் துறையில் பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி, மத்திய அரசின் பல விருதுகளை மக்கள் நல்வாழ்வுத் துறைக்குப் பெற்றுத் தந்து சிறப்புச் சேர்த்துள்ள மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிந்தகம்பள்ளி கிராமம் என்பது நான் தற்போது வாழ்ந்துவரும் எனது சொந்தக் கிராமம் ஆகும். எங்கள் பகுதி ஆந்திர மாநிலத்தின் எல்லையினை ஒட்டியுள்ள பகுதியாகும். அது ஏழை மக்களும் மலைவாழ் மக்களும் அதிகமாக வாழ்கின்ற பகுதியாகும். மேலும், அது மலைப் பகுதிகள் அதிகமாக உள்ள பகுதியாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். எங்கள் பகுதியானது ஆந்திர மாநில எல்லையை ஒட்டியுள்ள பகுதியாக உள்ளது. அங்குள்ள ஏழை மற்றும் மலைவாழ் மக்கள் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், பர்கூர் அல்லது கிருஷ்ணகிரி பகுதிகளுக்குத்தான் செல்ல வேண்டும். ஆகவே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, விதிகளைத் தளர்த்தி, எங்கள் பகுதியில் இருக்கின்ற அந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினைத் தரம் உயர்த்தித் தருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சிந்தகம்பள்ளி கிராமத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கான அவசியம் குறித்து*

பல்வேறு காரணங்களை எடுத்துச் சொன்னார்கள். தற்போது Health and Wellness Centre அனைவருக்கும் நலவாழ்வு என்ற திட்டத்தின் அடிப்படையில், சிந்தகம்பள்ளி கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அங்குள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திலே 12 வகையான கூடுதல் சேவைகளை இந்த ஆண்டு முதல் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகின்றது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பல்வேறு காரணங்களுக்காக ஐந்து மருத்துவர்கள் கொண்ட அந்த upgradation–ஐ நிச்சயமாக நிதிநிலை மற்றும் அங்குள்ள நோயாளிகளின் எண்ணிக்கைக்கேற்ப, அவரது கனிவான கோரிக்கையை ஏற்று, இந்த அரசு கருணையோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. இராஜேந்திரன் அவர்கள்.

திரு. சி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கை கனிவோடு பரிசீலனை செய்யப்படும் என்று சொல்லிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்கின்ற மற்றொரு கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லை என்று சொன்னாலும்–பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாரூர் அரசு மருத்துவமனை நீண்ட நாட்களாக. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராஜேந்திரன், என்ன சொல்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். மூலக் கேள்விக்குத் தொடர்புடையதைத்தான் கேட்க வேண்டும். (குறுக்கீடுகள்) நீங்கள் தனியாக, தொடர்பில்லாத கேள்வியைக் கேட்கக் கூடாது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) இவர் மூலக் கேள்வியைக் கேட்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) அவர் துணைக் கேள்விதான் கேட்டார். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எனக்கே சொல்லிக் கொடுத்தால், நான் என்ன செய்யமுடியும்? துணைக் கேள்வியை மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாக கேட்க வேண்டும். கேளுங்கள்.

2019 ஜூலை 10]

திரு. சி.வி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் 60 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. எனவே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு புதிய கட்டடத்தைக் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பழைய கட்டடம் என்று சொன்னால், அதனை அரசு அதிகாரிகள் ஆய்வு செய்து* demolition certificate *தருவார்கள். பின்னர் அங்கு புதிய கட்டடம் அரசு சார்பாக கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

77—

உலர்களம்

***13403—திரு. வி.எஸ். காளிமுத்து:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாராபுரம் தொகுதியில் மூலனூர் வஞ்சிவலசுவில் உலர்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தாராபுரம் தொகுதியில் மூலனூர் வஞ்சிவலசுவில் உலர்களம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.